கவனிக்க.- இந்த வர்த்தமானியின் ஆங்கில மற்றும் சிங்கள மொழிப் பிரதிகள் வெவ்வேறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1942/21 - 2015 නොවැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.11.26

*1942/21 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

பிரிவு 4(2) இன் படியான பிரசுரித்தல்

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன்பின்னர் "நிறுவகம்"- எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள 'ஆதனம், பொறி, உபகரணங்கள், முதலீட்டு ஆதனம் மற்றும் உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்களை' வழங்கியுள்ளது. நிதி அறிக்கையிடல் நோக்கத்துக்கான ஆதனம், பொறி, உபகரணங்கள், முதலீட்டு ஆதனம் மற்றும் உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்கள் இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் முதலாவது நாளில் இருந்து அமுலுக்கு வரும்.

*நிறுவகச் சபையின் கட்டளைப்படி,*

*அருணஅல்விஸ்,*
*செயலாளர்.*

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்
இல. : 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2015, நவெம்பர் 26.

# நிதி அறிக்கையிடல் நோக்கத்துக்காக ஆதனம், பொறி, உபகரணங்கள், முதலீட்டு ஆதனம் மற்றும் உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டுக்கான வழிகாட்டல்கள்

## பொறுப்புத் துறப்பு

இந்த ஆவணத்தின் நோக்கமானது தயாரிப்பாளர்கள், சேவைவழங்குனர் பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களுக்கு நிதி அறிக்கையிடல் நோக்கத்துக்காக ஆதனம், பொறி, உபகரணங்கள், முதலீட்டு ஆதனம் மற்றும் உயிரியல் சொத்துக்கள் முதலியவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியினை அடைவதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல் ஆகும்.

இந்த வழிகாட்டல்களில் கூறப்பட்ட பரிந்துரைகள் மற்றும் ஏதேனும் பிரயோகிக்கக்கூடிய சட்டதிட்டங்கள் அல்லது கணக்கீட்டு நியமங்களிடையே முரண்பாடுகள் காணப்படுமிடத்து, அவ்வாறான பின்குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் முதன்மை வாய்ந்தவையாகும். இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அல்லது வழிகாட்டல்களில் இருந்து நீக்கப்படும் உள்ளடக்கங்களின் விளைவாக யாதேனும் தரப்பினருக்கோ அல்லது இந்த வழிகாட்டல்கள் ஏற்பாடுகளில் தங்கியிருப்பதனால் அல்லது வேறு வகைகளில் (கவனயீனம் அல்லது வேறு காரணங்களினால்) ஏற்படக்கூடிய விளைவுகளுக்கோ எவ்வாறான வகையிலும் பொறுப்பு அல்லது கடப்பாட்டினை ஏற்றுக் கொள்ளாது.

## அறிமுகம்

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக மதிப்பீடுகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வழிகாட்டலின் நோக்கமானது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்கான சட்டகம் ஒன்றினை வழங்கி அதன் மூலம் ஆதனம் பொறி உபகரணங்கள், முதலீட்டு ஆவணங்கள் மற்றும் உயிரியல் சொத்துக்கள் ஆகியவற்றின் மதிப்பீட்டிலான நம்பகத் தன்மை மற்றும் கொள்கை நிலைமாறாத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதாகும். இந்த வழிகாட்டலின் தயாரிப்பிலே இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLFRS) மற்றும் சர்வதேச மதிப்பீட்டு நியமங்கள் (IVS) ஆகியவற்றின் தேவைப்பாடுகள் மற்றும் விளைவுகள் ஆகியன கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக நிலைத்த தன்மை வாய்ந்த பிரயோகத்தினை உறுதி செய்வதற்காக சொத்துக்களின் மதிப்பீடு முதலான விடயங்களை தெளிவுபடுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

## பிரயோகம்

இந்தப் பிரயோக வழிகாட்டல் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் கீழ் அவ்வாறான சொத்துக்களின் பெறுமதியினை உறுதி செய்யும் நோக்கத்துக்காகப் பிரயோகிக்கப்படும். நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் உரிய இலங்கைக் கணக்கீட்டு நியமம் ஒன்றின் தேவைப்பாடு ஒன்றினால் குறிப்பிட்ட மாற்றம் செய்யப்பட்டால் அல்லாது, பிரயோகிக்கக்கூடிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பொதுவான மதிப்பீட்டு நியமங்களின் கோட்பாடுகளுக்கு இணக்கமாக இருத்தல் வேண்டும்.

## தகைமைகள்

பொதுவான வகைகூறல் தகைமை கொண்ட உரிமங்களது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்கான விசேட தன்மை வாய்ந்த சொத்து (பிரிவு 'இ' பிரயோகிக்கப்படத்தக்க) தொடர்பான மதிப்பீடுகள் தவிர்ந்த ஆதனம் பொறி உபகாரணங்கள், முதலீட்டு ஆதனங்கள் மற்றும் உயிரியல் சொத்துக்கள் ஆகிவற்றின் ஒவ்வொரு வெளிவாரி மதிப்பீடுகளும், பகுதி 'அ' அல்லது 'ஆ' இல் குறிப்பிடப்பட்ட தகுதிக்கான அடிப்படைகளுக்கு இணக்கமான தகைமை வாய்ந்த மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். விசேட தன்மை வாய்ந்த சொத்து ஒன்று தொடர்பான மதிப்பீடுகளின் போது தகுதிக்கான அடிப்படைகளுக்கான பகுதி கீழே குறிப்பிடப்பட்டவாறு பகுதி 'இ' பிரயோகிக்கத்தக்கதாகும்.

அ. இலங்கை மதிப்பீட்டு நிறுவகத்தின் (IVSL) கூட்டிணைவு அங்கத்தவரான பின்வருவோரில் ஒருவர்:

(i) ஒரு முதுநிலை உறுப்பினர்; அல்லது

(ii) ஒரு பட்டதாரி உறுப்பினராக அந்த அங்கத்துவத் தரத்தில் ஐந்து வருட அனுபவங்களைக் கொண்ட அங்கத்தவர்; அல்லது

(iii) ஒரு சகபாடி உறுப்பினராக அந்தத் தரத்தில் இருபது வருட அனுபவங்களைக் கொண்ட அங்கத்தவர்; அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் பட்டய மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் (RICS) கூட்டிணைவு அங்கத்தவரான பின்வருவோரில் ஒருவர்:

(i) ஒரு முதுநிலை உறுப்பினர்; அல்லது

(ii) RICS அமைப்பின் ஒரு உறுப்பினராக அந்தத் தரத்தில் ஐந்து வருட அனுபவங்களைக் கொண்ட அங்கத்தவர்.

இ. தொழில்நுட்ப ரீதியாக அல்லது வேறு வகைகளில் விசேட தன்மை வாய்ந்த சொத்துக்களுக்கு மதிப்பீட்டாளர் அவசியம் எனக் கருதுமிடத்து சீரமதிப்பு மதிப்பீட்டிற்காக நிபுணர் ஒருவரது ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**அக்கறை முரண்பாடுகள்**

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக ஆதனம் பொறி உபகரணங்கள், முதலீட்டு ஆதனங்கள் மற்றும் உயிரியல் சொத்துக்களின் மதிப்பீட்டில் தொடர்புபடும் தொழில்சார் நபர்கள் ஒழுக்கநெறித் தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக (உதாரணமாக, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் உறுப்பினர்கள் - ஒழுக்கநெறிக் கோவைகள்) நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். ஆகையால், அவர்கள் தமக்கு அக்கறை முரண்பாடு நிலைமைகள் தோன்றக் கூடிய நிலைமைகளை அடையாளம் காண்பதற்கான நியாயமான படிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். அச்சுறுத்தல்களின் முக்கியத்துவத்தினை மதிப்பிட்டு, அவ்வாறு அச்சுறுத்தல்கள் காணப்படின் அந்த அச்சுறுத்தல்களை நீக்குவதற்கான அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்துக்கு குறைப்பதற்கான அவசியமான பாதுகாப்பு நடைமுறைகளை பிரயோகித்தல் வேண்டும். மேலும், சேவை பெறுநர் உறவுமுறைகளை அல்லது பிரத்தியேகமான பணிக்கமர்த்தல்களை ஏற்றுக்கொள்ள அல்லது தொடர்ந்து மேற்கொள்ள முன்னர் அந்த தொழில்சார் நபர் சேவை பெறுநர் அல்லது மூன்றாம் தரப்பினருடனான வணிக உறவுகள் அல்லது அக்கறைகள் மூலமாக ஏற்படக்கூடிய ஏதேனும் அச்சுறுத்தல்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தினை மதிப்பிடல் வேண்டும்.

எவ்வாறெனினும், பொதுவான வகைக்கூறல் தகைமையைக் கொண்ட உரிமங்களது அவ்வாறான சொத்துக்களின் ஒவ்வொரு வெளிவாரி மதிப்பீடுகளும் உறவுமுறைத் தரப்பினர் நோக்கெல்லையினுள் உள்ளடங்காத மதிப்பீட்டாளர்களினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும். (LKAS 24 *உறவுமுறைத் தரப்பினர் வெளிப்படுத்தல்கள்*- இன் பந்தி 9 இல் வரையறுக்கப்பட்டவாறாக)

**மதிப்பீட்டு அறிக்கையின் செல்லுபடித் திகதி**

மதிப்பீட்டு அறிக்கையானது மதிப்பீட்டின் செல்லுபடித் திகதியைக் குறிப்பிடுவதுடன் அந்த மதிப்பீடானது குறித்த திகதியில் இருந்து நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும்.

**மதிப்பீட்டுக்கான அடிப்படை**

நிதி அறிக்கையிடலுக்கான மதிப்பீட்டின் அடிப்படையானது SLFRS 13 *சீரமதிப்பு அளவீடு* இல் குறிப்பிடப்பட்டவாறு சீரமதிப்பில் காணப்படல் வேண்டும்.

**வேலைப் பரப்பெல்லை**

அறிக்கையானது மதிப்பீட்டின் நோக்கத்தினுடைய ஒரு விபரணம், புலனாய்வின் அளவு, பின்பற்றப்பட்ட படிமுறைகள், எடுகோள்கள் மற்றும் வரையறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி இருத்தலை முகாமை உறுதி செய்தல் வேண்டும்.

**அறிக்கை உள்ளடக்கங்கள்**

மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய உள்ளடக்கங்கள் இணைப்பு 1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

# நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சீர்மதிப்பை அடைவதற்கான SLFRS 13 இன் வழிகாட்டல்கள்


## மேல்நோக்கு

சொத்தின் சீர்மதிப்பை மதிப்பிடுவதற்காக நடைமுறை சந்தை நிலைமைகளில் பிரதான சந்தையில் (பிரதான சந்தை காணப்படாத போது மிகவும் அனுகூலமான சந்தை) மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களிடையே கிரமமான ஊடுசெயல் ஒன்றின் மூலம் சொத்தினை விற்பதற்கான விலையை (அதாவது மதிப்பீட்டுத் திகதியில் சொத்தை வைத்திருக்கும் சந்தைப் பங்குபற்றுனரது பார்வையிலான வெளியேறல் விலை) மதிப்பீடு செய்வதற்கான நோக்கத்தின் அடிப்படையில் சீர்பெறுமதியானது மற்றொரு கணக்கீட்டு நியமத்தினால் அனுமதிக்கப்பட்டு அல்லது கட்டாயமாக்கப்பட்டால் ஆரம்ப மற்றும் பிற்கால மதிப்பீடுகளில் பிரயோகிப்பதற்கான சீர்பெறுமதி மதிப்பீட்டு சட்டகம் ஒன்றை இலங்கைக் கணக்கீட்டு நியமம் SLFRS 13 வழங்குகிறது.


உதாரணமாக:

- LKAS 16- *ஆதனம் பொறி உபகரணம்* நியமத்தின் படி பிற்காலத்தில் மீள்மதிப்பீட்டு முறையில் மதிப்பீடு செய்யப்படும் நிலையான சொத்துக்களின் மதிப்பிடல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகிய இரு விடயங்கள் தொடர்பாகவும் SLFRS 13 இன் பரப்பெல்லைக்கு உட்பட்டவையாகக் காணப்படுகின்றன.

    - LKAS 40- *முதலீட்டு ஆதனங்கள்* நியமத்தின் கீழான முதலீட்டு ஆதனங்கள், அவை சீர்மதிப்பு முறை அல்லது கிரய முறையில் மதிப்பீடு செய்யப்படுகின்றனவா என்பதைக் கருத்தில் கொள்ளாது அனைத்து முதலீட்டு ஆதனங்களும். கிரய முறை பின்பற்றப்படினும் கூட LKAS 40 இன் பந்தி 79 (e) இல் குறிப்பிடப்படும் வகையில் அவற்றின் சீர்மதிப்பு வெளிப்படுத்தப்படல் வேண்டும் (எனவே மதிப்பீடு அவசியமாகும்) ஆகையால் முதலீட்டு ஆதனமானது SLFRS 13 இன் பரப்பெல்லைக்கு உட்பட்டதாகவே உள்ளது.



## சீர்மதிப்பு அளவீட்டிற்கான சட்டகம்




**பரிப்பின் சொத்து**

சீர் பெறுமதி மதிப்பீடானது ஒரு குறித்த சொத்து அல்லது பரிப்புக்கானதாகும். ஆகவே, சந்தைப் பங்குபற்றுனர்கள் மதிப்பீட்டுத் திகதியில் சொத்து அல்லது பரிப்பை விலையிடும் போது சொத்தின் அல்லது பரிப்பின் குணவியல்புகள் தொடர்பான விடயங்களைக் கருத்தில் கொள்ளுவார்களாயின், உரிமம் சொத்தின் அல்லது பரிப்பின் குணவியல்புகளை சீர்மதிப்பில் மதிப்பிடும் போது அவ்வாறான குணவியல்புகளைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறான குணவியல்புகள் உதாரணமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) சொத்தின் நிலைமை மற்றும் அமைவிடம், மற்றும்

(ஆ) சொத்தின் விற்பனை அல்லது பாவனையில் ஏதேனும் வரையறைகள் காணப்படுமிடத்து அவ்வாறான வரையறைகள்

உதாரணம்: சொத்தின் பாவனையின் மீதான வரையறைகள்

காணி ஒன்றின் கொடையாளர் காணி ஒன்றினை விளையாட்டு அமைப்பு ஒன்றின் விளையாட்டுத் தேவைகளுக்காக அல்லாதவிடத்து, அயலவர் சமூகத்திற்கு இலாப நோக்கில் அல்லாத வதிவிடப் பகுதி ஒன்றின் நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்பட முடியும் என விதந்துரைத்துள்ளார். காணி தற்போது ஒரு விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப்படுகிறது. உரிய ஆவணங்களைப் பரிசோதித்த போது, அமைப்பானது தாம் சொத்தை விற்பனை செய்யின், கொடையாளரது வரையறையானது அமைப்பின் பயன்பாட்டுக்கு எனக் கொடையாளர் விதந்துரைத்தமையால் சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு மாற்றம் செய்யாது எனத் தீர்மானித்தது. மேலும், அமைப்பானது காணியை விற்பனை செய்வதில் இருந்து தடுக்கப்படவில்லை. அமைப்பினால் காணி பயன்படுத்தப்படாது, இக் காணி ஒரு வதிவிடப்பகுதி நிர்மாணத்துக்க பயன்படுத்தப்படலாம். அதற்கு மேலாக, காணியானது இலகுதன்மைக்கு (அதாவது: காணிக்குக் குறுக்காக சக்திவலுக் கம்பிகளை செலுத்துவதற்கான சட்ட உரிமை) உட்பட்டதாகும்.

ஆகவே, குறித்த வரையறையின் காரணமாக காணியின் சீர்மதிப்பு மதிப்பீட்டில் ஏற்படும் விளைவு மற்றும் இலகுதன்மை பின்வருமாறு:

(அ) காணியின் பாவனை மீதான கொடையாளரது வரையறை. இந்த நிலைமையின் கொடையாளரது வரையறை அமைப்புக்குப் பிரத்தியேகமானதாக இருப்பதன் காரணமாக, வரையறையானது சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு மாற்றப்பட முடியாது. ஆகவே, காணியின் சீர்பெறுமதியானது, அமைப்பினால் காணி பயன்படுத்தப்பட வேண்டிய வரையறையைக் கருத்தில் கொள்ளாது விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவதற்கான சீர்மதிப்பு (அதாவது சந்தைப் பங்குபற்றுனர்களினால் ஏனைய சொத்துக்கள் அல்லது ஏனைய சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுடன் இணைந்த பயன்பாட்டினால் சொத்தின் சீர்மதிப்பு உச்சப்படுத்தப்படும்) மற்றும் வதிவிடப் பகுதியாகப் பயன்படுத்துவதற்கான சீர்மதிப்பு (அதாவது சந்தைப் பங்குபற்றுனர்கள் தனித்த நிலைப் பாவனையின் காரணமாக சொத்தின் சீர்மதிப்பு உச்சப்படுத்தப்படும்) ஆகியவற்றில் உயர்வானதாகும்.

(ஆ) சக்திப் பயன்பாட்டு வழிகளுக்கான பயன்பாடு. சக்திப் பயன்பாட்டு வழங்கல்களுக்காக வழங்குதல் காணிக்குப் பிரத்தியேகமானது (காணியின் இயல்புகள்) ஆகையால், அது சந்தைப் பங்குபற்றுனர்களுக்கு காணியுடனேயே மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். ஆகவே காணியின் உயர்வான மற்றும் சிறப்பான பெறுமதி விளையாட்டு மைதானமா அல்லது குடியிருப்புப் பகுதி நிர்மாணமா என்பதைக் கருத்தில் கொள்ளாது நிலத்தின் சீர்மதிப்பு பெறுமதி இலகுவாக்கலின் பெயரில் கணக்கில் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பிரதான அல்லது கூடுதலான நன்மையுள்ள சந்தை**

சீர்மதிப்பு என்பது பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றினாலான ஊடுசெயல் மூலம் சொத்தை விற்பதனால் பெற்றுக்கொள்ளப்படக் கூடிய பெறுமதி ஆகும்.

1. பிரதானமான சந்தை அல்லது
2. அதிக நன்மை மிக்க சந்தை (பிரதான சந்தை காணப்படாதவிடத்து)

பிரதான சந்தையை (அல்லது மிக நன்மை மிக்க) உருவாக்கிக் கொள்வதற்காக உரிமம் சாத்தியமான சந்தைகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். உரிமம் பிரதான சந்தையை (அல்லது மிக நன்மை மிக்க) கண்டறிவதற்காக ஆழமான தேடுதல்களை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் கிடைக்கக் கூடியதாக உள்ள அனைத்து தகவல்களும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். இதற்கு முரணாக தகவல் கிடைப்பனவில்லாதபோது உரிமம் வழக்கமாக ஊடுசெயல்களை மேற்கொள்ளும் சாந்த பிரதான (அல்லது மிக நன்மை மிக்க) சந்தையாக கருதப்படும்.

உரிமம் பிரதான சந்தையை அடையாளம் கண்டதும், நன்மை மிக்க மற்றொரு சந்தை (சந்தைகள்) காணப்படினும் கூட சீர்பெறுமதி சந்தையில் மதிப்பிடப்படல் வேண்டும். மேலும், மதிப்பீட்டுத் திகதியில் சாத்தியமான சந்தை அணுகக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

உதாரணம்: ஒரு சொத்து இரு வேறு உத்வேகமான சந்தைகளில் வேறுபட்ட விலைகளில் விற்கப்படலாம்.

| சந்தை | A | B |
|---|---|---|
| வருடாந்த அளவு | 30,000 | 20,000 |
| மாதாந்த விற்பனைகள் | 30 | 12 |
| பெறப்பட்ட விலை | 2,600 | 2,500 |
| ஊடுசெயல் கிரயங்கள் | 300 | 100 |
| போக்குவரத்துக் கிரயங்கள் | 200 | 200 |
| பெறப்பட்ட தேறிய தொகை | 2,100<br>(2,600-300-200) | 2,200<br>(2,500-100-200) |
| சந்தை நிலைமை | பிரதான சந்தை<br>(கூடுதலான அளவு மற்றும் நடவடிக்கை மட்டங்களைக் கொண்ட சந்தை) | அதிக நன்மை மிக்க சந்தை<br>(அணுகக்கூடிய சந்தைத் தகவல்கள் கிடைக்காத போது) |
| சாத்தியமான சீர்பெறுமதி | 2,400<br>(2,600-200) | 2,300<br>(2,500-200) |

**நிதி சாரா சொத்துக்களின் உயர்வான மற்றும் சிறப்பான பயன்பாடு**

நிதி சாரா சொத்து ஒன்றின் சீர் மதிப்பீடானது சொத்தினை உயர்வான மற்றும் சிறப்பான முறையில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தை உயர்வான மற்றும் சிறப்பான முறையில் பயன்படுத்தக் கூடிய மற்றொரு சந்தைப் பங்குபற்றுனருக்கு விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார பயன்பாட்டினை ஏற்படுத்துவதற்கான சந்தைப் பங்குபற்றுனரது இயலுமையைக் கருத்தில் கொள்கின்றது. இதன்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன:


(அ) பௌதீக ரீதியான சாத்தியத்தன்மை - சொத்தின் விலையிடலின் போது சந்தைப் பங்குபற்றுனர்கள் கருத்தில் கொள்ளும் சொத்தினுடைய பௌதீக குணவியல்புகள் (உ-ம்: சொத்தின் அமைவிடம் அல்லது அளவு)

(ஆ) சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டதா - சொத்தின் விலையிடலின் போது சந்தைப் பங்குபற்றுனர்கள் கருத்தில் கொள்ளும் சொத்தின் பாவனையின் மீதான சட்ட ரீதியான வரையறைகள் (உ-ம்: சொத்துக்கு உரித்தான பிராந்திய விதிமுறைகள்)

(இ) நிதிசார் சாத்தியம் - பௌதீக ரீதியாக சாத்தியமான சட்ட ரீதியாக அனுமதிக்கத்தக்க சொதது என்பதுடன் சொத்தைப் பயன்பாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் சந்தைப் பங்குபற்றுனர்களது முதலீட்டுக்குத் தேவையான திரும்பலை வழங்கத்தக்க போதுமான வருமானம் அல்லது காசுப் பாய்ச்சலை (சொத்தினைப் பாவனைக்காக வகையில் மாற்றுவதற்கான கிரயங்களைக் கருத்தில் கொண்டு) ஏற்படுத்தக் கூடியதா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

உயர்வான மற்றும் சிறப்பான பயன்பாடானது உரிமம் வேறுபட்ட சந்தைப் பங்குபற்றுனர்களது பார்வையில் இருந்தே அடையப்படுகிறது. எனினும், சந்தைப் பங்குபற்றுனர்களின் மற்றொரு பயன்பாடானது சொத்தின் பயன்பாட்டை உச்சப்படுத்தும் என சந்தை அல்லது ஏனைய காரணிகள் இனம் காட்டாதவிடத்து உரிமத்தின் நிதி சாரா சொத்தின் தற்போதைய பயன்பாடானது உயர்வான மற்றும் சிறப்பான பயன்பாடு எனக் கொள்ளப்படும்.

உரிமமானது சொத்தினை உயர்வான மற்றும் சிறப்பான பயன்பாட்டில் ஈடுபடுத்த விரும்பாவிடினும் கூட( உ-ம்: உரிமம் போட்டி நிலைமையைப் பாதுகாக்கும் நோக்கில் ஏனையோர் அதனைப் பயன்படுத்தாத வகையில் பயன்படுத்தல்) நிதி சாரா சொத்துக்களின் சந்தைப் பங்குபற்றுனர்களின் பாவனையை உயர்வான மற்றும் சிறப்பான பயன்பாட்டில் கருதிக் கொண்டு உரிமம் சீர்பெறுமதியை மதிப்பிடல் வேண்டும்.




**சந்தைப் பங்குபற்றுனர்களது இயல்புகள்**

சீமதிப்பினை அளவிடும் பொழுது, சந்தைப் பங்குபற்றுனர்கள் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றை விலையிடும் பொழுது கருத்தில் கொள்ளத்தக்க எடுகோள்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். பிரத்தியேகமாக சந்தைப் பங்குபற்றுனர்களை அடையாளம் காண்பதற்குப் பதிலாக, அளவீடு செய்யப்படும் சொத்து அல்லது பொறுப்பின் ஊடுசெயலுக்கான சந்தைத் தரப்பினரது இயல்புகளை உரிமம் அடையாளம் கண்டு கொள்ளுதல் வேண்டும். இந்த இயல்புகளைத் தீர்மானிக்கும்போது, உரிமம் குறித்த சொத்து அல்லது பொறுப்பு, பிரதான (அல்லது யார் நன்மை மிக்க) சந்தை மற்றும் சந்தையின் சந்தைப் பங்குபற்றுனர்கள் ஆகிய காரணிகளைக் கருத்தில் கொள்வதுடன் முக்கிய மதிப்பீடுகளை மேற்கொள்ளவேண்டி ஏற்படலாம். உதாரணமாக, உற்பத்திக் கம்பனி ஒன்றிடம் காணப்படும் நிலம் ஒன்றின் சீர்மதிப்பை அளவிடும்போது அந்த நிலத்தின் உயர்வான மற்றும் சிறப்பான பாவனையானது மெய்ச் சொத்து வதிவுள்ள மெய்ச் சொத்து அபிவிருத்தியாக கானப்படின் உரிமம் சந்தைப் பங்குபற்றுனராகக் கருதப்படலாம்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 13 (SLFRS 13) சந்தைப் பங்குபற்றுனர்கள் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருப்பர் என எடுகோள் மேற்கொள்கின்றது.

- அவர்கள் ஒருவருக்கொருவர் சுயாதீனமானவர்களாக அதாவது, உறவுமுறை சார்ந்தவர்களாக இல்லாது இருத்தல்.
- அவர்கள் அறிவு கொண்டவராக இருத்தல். அதாவது, வழமையான, நடைமுறையான உரிய அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகளின் மூலம் பெறப்படும் தகவல்கள் அடங்கலாக, கிடைக்கப்பெறும் சகல தகவல்களையும் உபயோகித்து சொத்து அல்லது பரிப்பு மற்றும் ஊடுசெயல் பற்றிய விளக்கத்தினை கொண்டிருத்தல்.

- அவர்கள் சொத்து அல்லது பரிப்புக்கான ஊடுசெயலை ஏற்படுத்தக்கூடியவர்களாக இருத்தல்.
- சொத்து அல்லது பரிப்புக்காக ஊடுசெயலை ஏற்படுத்த விருப்புடையவர்களாக இருத்தல். அதாவது, அவர்கள் உந்தூக்கப்படுத்தப்படல் அன்றி பலவந்தப்படுத்துவதோ அல்லது பிற வழிகளில் கட்டாயப்படுத்துவதோ அல்ல.

**மதிப்பிடல் நுட்பங்கள்**

உரிமம் சூழ்நிலைகளுக்கு பொருத்தமான, சீர்மதிப்பை அளவிடக்கூடிய போதுமான தரவு, பொருத்தப்பாடான அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள் உச்சமான பயன்பாட்டை ஏற்படுத்தக்கூடிய, அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை இழிவளவாக்கக் கூடிய மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்த வேண்டும். **அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள்** என்பது உண்மையான நிகழ்வுகள் அல்லது ஊடுசெயல்கள் தொடர்பாக வெளிப்படையாக கிடைக்கக் கூடிய தகவல்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை விலையிடும் பொழுது சந்தைப் பங்குபற்றுனர்கள் பயன்படுத்தக்கூடிய அனுமானங்கள் முதலான சந்தைத் தரவுகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டவையாகும். **அவதானிக்க முடியாத உள்ளீடுகள்** என்பது சந்தைத் தரவுகள் கிடைக்கப்பெறாத, சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை விலையிடும் பொழுது சந்தைப் பங்குபற்றுனர்கள் பயன்படுத்தக்கூடிய அனுமானங்கள் தொடர்பாகக் கிடைக்கக்கூடிய சிறந்த தகவல்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகும்.

பெருமளவில் பயன்படுத்தப்படும் மூன்று மதிப்பீட்டு நுட்பங்களாவன: சந்தை அணுகுமுறை, கிரய அணுகுமுறை மற்றும் வருமான அணுகுமுறை ஆகியனவாகும். மதிப்பீட்டு நுட்பம் ஒன்றின் அல்லது அதன் பிரயோகத்தின் மாற்றம் ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமாக கருதி இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS 8 க்கு அமைவாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். எனினும், கணக்கீட்டு மதிப்பீடு ஒன்றின் மாற்றத்துக்கான LKAS 8 இன் படியான வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டு நுட்பம் அல்லது அதன் பிரயோகத்தின் மாற்றத்துக்கு அவசியமில்லை.

**மதிப்பீட்டு நுட்பங்களுக்கான உள்ளீடுகள்**


மதிப்பீட்டு நுட்பங்களுக்கான உள்ளீடுகள் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை விலையிடும் பொழுது சந்தைப் பங்குபற்றுனர்கள் பயன்படுத்தக்கூடிய அனுமானங்கள் ஆகும். சீர்மதிப்பை வகைப்படுத்தல் சீர்மதிப்பை மதிப்பிடுவதற்கான உள்ளீடுகனை மூன்று மட்டங்களாக சீர்மதிப்புப் படிமுறை வகைப்படுத்துகிறது.

| | |
|---|---|
| **மட்டம் 1** | உரிமம் மதிப்பீட்டுத் திகதியில் அணுகக் கூடியதாகவுள்ள அதே வகையான சொத்துக்கள் அல்லது பரிப்புக்களுக்கான செயற்திறனான சந்தையிலான கூறப்பட்ட அல்லது சந்தை விலை |
| **மட்டம் 2** | சொத்துக்காக நேரடியாகவோ அல்லது நேரில் முறையாகவோ அவதானிக்கக் கூடியதான மட்டம் 1 இல் உள்ளடக்கப்பட்ட விலை கூறப்பட்ட அல்லது சந்தை விலைகள் தவிர்ந்த உள்ளீடுகள் |
| **மட்டம் 3** | உள்ளீடுகள் சொத்துக்காக அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகள் ஆகும். |

மட்டம் 2 உள்ளீடுகள்- சொத்துக்கள் குறிப்பிட்ட (ஒப்பந்த) பதங்களைக் கொண்டிருப்பின், மட்டம் 2 உள்ளீடானது சொத்தின் முழுமையான காலத்துக்கும் கணிசமாக அவதானிக்கக் கூடியதாகும்.

மட்டம் 3 உள்ளீடுகள்- அதாவது, அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பொருத்தமான அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள் கிடைப்பனவு அற்ற வரையில் மதிப்பீட்டுத் திகதியில் சொத்துக்கான சந்தை நடவடிக்கை ஏதேனும் இருப்பின் அவற்றுக்கான சிறிய சூழ்நிலைகளை அனுமதிக்கக்கூடிய அளவில் சீர் மதிப்பை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட முடியும். உரிமம் ஒன்று சூழ்நிலைகளில் கிடைக்கக் கூடியதாகவுள்ள உரிமத்தின் சொந்த தரவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய, நியாயமாகக் கிடைக்கக் கூடிய சந்தைப் பங்குபற்றுனர்களது அனுமானங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் கருத்தில் எடுத்து சிறப்பான தகவல்களைக் கொண்டு அவதானிக்க முடியாத உள்ளீடுகளை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

சீர்மதிப்பு வகைப்படுத்தலானது செயற்திறனான சந்தைகளில் ஒரே வகையான சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கு குறிப்பிடப்பட்ட விலைகளுக்கு (சீராக்கப்படாத) உயர்வான முன்னுரிமையை வழங்குவதுடன் (மட்டம் 1 உள்ளீடுகள்), அவதானிக்க முடியாத உள்ளீடுகளுக்கு குறைவான முன்னுரிமையை வழங்கும் (மட்டம் 3 உள்ளீடுகள்). ஆகவே, முக்கியமான மட்டம் 3 உள்ளீடுகளை பயன்படுத்தி சீர்மதிப்பை மதிப்பிடுதல் பெரும்பாலும் சந்தைத் தரவுகள் கிடைப்பனவு இன்மையால் அடிப்படையில் சவால் மிக்கதாக இருக்கும்.




\+ பொருத்தப்பாடான அவதானிக்கக் கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்தல். அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள் சந்தைத் தரவுகளை உள்ளடக்கும் (விலைகள் மற்றும் பொதுப் பயன்பாட்டுக்கு கிடைக்கக் கூடிய ஏனைய தகவல்கள்)

# அவதானிக்க முடியாத உள்ளீடுகள் சந்தைப் பங்குபற்றுனர்கள் வேறுபட்ட அனுமானங்களை பயன்படுத்தின் சீராக்கப்பட வேண்டிய உரிமத்தின் சொந்தத் தரவுகளை (பாதீட்டு எதிர்வு கூறல்கள்) உள்ளடக்கும்.

உரிமமானது சூழ்நிலைகளுக்கு பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்துவதுடன் அதற்காக அவதானிக்க கூடிய உள்ளீடுகள் பயன்பாட்டை உச்சப்படுத்தக் கூடிய, அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பயன்பாட்டை இழிவளவாக்கக் கூடிய வகையில் சீர்மதிப்பு மதிப்பீட்டுக்கான போதுமான தரவுகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

| | **சந்தை அணுகுமுறை (சந்தை விலை கிடைப்பனவாக உள்ளது)** | **வருமான அணுகுமுறை (கழிவிடப்பட்ட காசுப்பாய்வு)** | **கிரய அணுகுமுறை** (உ-ம்: பதிலீட்டுக் கிரயம்) |
|---|---|---|---|
| மட்டம் 1 | • ஒத்த தன்மையான உருப்படிக்கான விலை<br>• சீராக்கம் இன்றிப் பயன்படுத்தல் வேண்டும் | • நேரடியாக அடையாளம் காணக்கூடிய காசுப்பாய்ச்சல்கள் | • நேரடியான வருமானம் உழைப்பதில்லை<br>• ஒத்த வகையான சந்தை இல்லை<br>• விலை சீராக்கப் படல் வேண்டும் |
| மட்டம் 2 | • விலை சீராக்கப்படல் வேண்டும்<br>• அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள் | • அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள்<br>• அரிதானவை | • அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள்<br>• அரிதானவை |
| மட்டம் 3 | • விலை சீராக்கப்படல் வேண்டும்<br>• அவதானிக்க முடியாத உள்ளீடுகள் | • அவதானிக்க முடியாத உள்ளீடுகள் | • அவதானிக்க முடியாத உள்ளீடுகள் |

சந்தை அணுகுமுறை என்பது விலைகள் மற்றும் ஒத்த தன்மையான அல்லது ஒப்பிடக்கூடிய சொத்துக்கள், பரிப்புக்கள் அல்லது வணிக அமைப்பு முதலான சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் தொகுதியுடன் தொடர்புபட்ட சந்தை ஊடுசெயல்களால் உருவாக்கப்பட்ட தொடர்புபட்ட ஏனைய தகவல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது. உ-ம்: ஒப்பிடக் கூடியவற்றின் தொகுதியில் இருந்து பெறப்பட்ட சந்தைப் பெருக்கிகள்

கிரய அணுகுமுறையானது சொத்து ஒன்றின் சேவை இயலளவை பதிலீடு செய்வதற்காக தற்போது தேவையாகவுள்ள தொகையினை (தற்போதைய பதிலீட்டுக் கிரயம் எனக் குறிப்பிடப்படும்) பிரதிபலிக்கும். சந்தைப் பங்குபற்றுனர் விற்பனையாளரது பார்வையில், சொத்துக்காகப் பெறப்படக் கூடிய விலையானது சந்தைப் பங்குபற்றுனர் கொள்வனவாளர் ஒருவருக்கு அதே வகையான பயன்பாட்டைத் தரக்கூடிய பதிலீட்டு சொத்து ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது உருவாக்குவதற்காக ஏற்படக்கூடிய கிரயத்தின் பெறுமதி இழப்புக்கள் சீராக்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் தங்கியிருக்கும். பெறுமதி இழப்பு என்பது பௌதீக அழிவு, தொழிற்பாட்டு (தொழிற் திறன்) இழப்பு மற்றும் பொருளாதார (வெளிவாரி) இழப்பு ஆகியவற்றினை உள்ளடக்குவதுடன் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக தேய்மானங்கள் (வரலாற்றுக் கிரயத்தின் ஒதுக்கீடு) அல்லது வரி நோக்கங்களுக்காக தேய்மானங்களில் (குறிப்பிட்ட சேவை ஆயுட் காலங்களை பிரயோகித்தல்) இருந்து வேறுபட்டதாகும்.

உ-ம்: தற்போதைய பதிலீட்டு கிரய முறை / தேய்மான பதிலீட்டு முறை)

வருமான அணுகுமுறையானது எதிர்கால தொகைகளை (காசுப்பாய்ச்சல்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினங்கள்) ஒரு நடைமுறைத் தொகைக்கு (கழிவிடப்பட்ட) மாற்றுவதாகும். வருமான அணுகுமுறை பயன்படுத்தப்படும் போது, சீர்பெறுமதி மதிப்பீடானது எதிர்காலத் தொகைகள் தொடர்பான தற்போதைய சந்தை எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும். அவ்வாறான மதிப்பீட்டு நுட்பங்கள் உதாரணமாகப் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

## (அ) இற்றைப் பெறுமதி நுட்பங்கள்

இற்றைப் பெறுமதி நுட்பங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சொத்து ஒன்றின் சீர் மதிப்பீடானது மதிப்பீட்டுத் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களது பார்வையில் பின்வரும் மூலகங்களை உள்ளடக்குகிறது:

(i) மதிப்பிடப்படும் சொத்தின் எதிர்கால காசு பாய்ச்சல்களின் ஒரு மதிப்பீடு

(ii) காசு பாய்ச்சல்களில் அடிப்படையாக காணப்படக் கூடிய நிச்சயமற்ற தன்மையை வெளிப்படுத்தக் கூடியவாறான காசுப் பாய்ச்சல்களின் தொகை மற்றும் கால அளவுகளிலான எதிர்பார்க்கக் கூடிய சாத்தியமான மாற்றங்கள் தொடர்பான எதிர்பார்க்கை (அதாவது, குறைந்தபட்ச வெளிப்படையான காலமாக 5 வருடங்கள்)

(iii) இடர் நீங்கலான வட்டி வீதத்தினால் பிரதிபலிக்கப்படும் பணத்தின் காலப் பெறுமதி

(iv) இடர் வட்டம்

(v) சூழ்நிலைகளில் சந்தைப் பங்குபற்றுனர்கள் கருத்தில் எடுக்கக் கூடிய ஏனைய காரணிகள்

(ஆ) சில அருவ சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும் பல கால மிகை உழைப்பு முறை

மதிப்பீட்டுத் திகதியில் சந்தை நிலைமைகளின் கீழ் சந்தைப் பங்குபற்றுனர்கள் நிதிசார் சொத்து ஒன்றை விலையிடும் போது மேற்கொள்ளும் மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைக்கான சீராக்கங்கள் உள்ளடங்கலான சீராக்கங்களினை மேற்கொள்வதன் காரணமாக, உரிமமானது மதிப்பீடு நுட்பங்களை பயன்படுத்தும் போது மதிப்பீட்டு சீராக்கங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

உரிமம் மதிப்பீட்டு நுட்பத்தை பயன்படுத்துவதுடன் மாற்றமானது வரையறுக்கப்பட்ட மற்றும் நியாயப்படுத்தக் கூடிய சூழ்நிலைகளில் மாத்திரம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**அவதானிக்க முடியாத உள்ளீடுகளைப் பயன்படுத்தும் மதிப்பீட்டு நுட்பங்களை இணக்குதல்.**

ஊடுசெயல் விலையானது ஆரம்ப ஏற்பிசைவின் போதான சீர் பெறுமதியாகவும், பிற்கால மதிப்பீடுகளில் அவதானிக்க முடியாத உள்ளீடுகளைப் பயன்படுத்தி சீர்பெறுமதி மதிப்பிடப்படுவதாகவும் உள்ள போது, மதிப்பீட்டு நுட்பமானது ஆரம்ப ஏற்பிசைவின் போதான மதிப்பீட்டின் பெறுமதி ஊடுசெயல் விலையிற்கு சமப்படக்கூடிய வகையில் இணக்கம் செய்யப்படல் வேண்டும்.

இணக்கப்படுத்தலானது மதிப்பீட்டு நுட்பம் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிப்பதை உறுதி செய்வதுடன் அது மதிப்பீட்டு நுட்பத்தின் மீது ஏதேனும் சீராக்கங்கள் அவசியமா என்பதைத் தீர்மானிப்பதற்கு உரிமத்துக்கு உதவுகிறது (உதாரணமாக, மதிப்பீட்டு நுட்பத்தினால் கருத்தில் எடுக்கப்படாத சொத்தின் குணவியல்புகள் காணப்படலாம்). ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், அவதானிக்க முடியாத உள்ளீடுகளைப் பயன்படுத்தும் மதிப்பீட்டு நுட்பம் அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தி சீர்பெறுமதியை மதிப்பீடு செய்யும் போது, உரிமமானது அவ்வாறான மதிப்பீட்டு நுட்பங்கள் மதிப்பீட்டுத் திகதியில் அவதானிக்கக் கூடிய சந்தைத் தரவுகளைப் (உதாரணமாக, ஒத்த வகையான சொத்துக்கான விலை) பிரதிபலிப்பதனை உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

**கூறாக்கலும் தேய்மானமும்**

இந்த அணுகுமுறையின் பிரதானமான குறிக்கோளானது சொத்தின் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் உரிமத்தினால் நுகர எதிர்பார்க்கப்படும் நடத்தையினை மிகத் துல்லியமாக பிரதிபலித்தல் ஆகும்.

ஏற்பிசைவும் தேய்மானமும்

கொண்டுசெல்லல் பெறுமதி வரலாற்றுக் கிரயத்தை அடிப்படையாகக் கொள்கைமாறாது போது, மொத்தப் பெறுமதி தொடர்பில் முக்கிய கிரயத்தைக் கொண்ட மற்றும் பொருண்மைத்தன்மை வாய்ந்த வகையில் வேறுபட்ட ஆயு ட்காலத்தைக் கொண்ட கூறுகளின் கிரயம் உடனடியாக அடையாளம் காணக்கூடியதாக இருத்தல் வேண்டும். (G16 of IVS 300)

முன்கொணரற் பெறுமதி சீர்மதிப்பு அல்லது உருப்படியின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக்

கொண்டுள்ள போது, கூறுகளுக்கு இடையில் உருப்படிகளின் சீர்மதிப்புக்கு ஒதுக்கீடு ஒன்று மேற்கொள்ளப்படும்.

ஆதனம் பொறி உபகரணத்தின் கூறு ஒன்றுக்கு சுமத்தக்கூடிய கிரயம் அக் கூறுகளுக்கு செயற்திறனான சந்தை ஒன்று இருப்பின் தீர்மானிக்கப்படக்கூடியதாக இருப்பினும், அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் அக்கூறு செயற்திறனான விற்பனை செய்யப்படாது. இது பொதுவாக கட்டடம் முதலானவற்றுக்கு ஏற்படுவதாகும். உதாரணமாக, கட்டடங்கள் வெப்பமாக்கல், ஒளியூட்டல் மற்றும் காற்றோட்டச் சீராக்கல் முதலானவற்றுக்கு அவசியமான பொறிமுறை மற்றும் மின்னியல் சேவைகள் மேற்கொள்ளப்படாது விற்கப்படுவது அரிதாகும். மேலும் பொருத்தப்பட்ட பொறிகள் கட்டடம் இன்றி விற்கப்பட முடியாது. (G17 of IVS 300)

தனித்தனியான கூறுகளின் பெறுமதி நம்பகமாக மதிப்பிடப்பட முடியாவிடின், மொத்த உருப்படிகளுக்கும் சுமத்தப்படக்கூடிய பெறுமதியானது கூறுகளிடையே பகிரப்படும். உருப்படியின் கிரயம் மொத்த உருப்படிகளின் கிரயம் ஆகியவற்றுக்கு இடையேயான விகிதம் அவ்வாறான பகிர்வுக்கு பொருத்தமான அடிப்படையாகக் காணப்படலாம். மொத்தப் பெறுமதியுடன் முக்கியமான கிரயத்தைக் கொண்ட ஆதனம், பொறி உபகரண உருப்படிகளின் ஒவ்வொரு பகுதியும் வேறுபட்ட பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கக் கூடிய உருப்படிகள் தனித்தனியாகத் தேய்விடப்பட வேண்டும். (LKAS 16 இன் பந்தி 43)

தொழிற்பாட்டில் தொடர்ந்தியங்கும் ஆதனம் பொறி உபகரணங்கள் (உதாரணமாக, விமானம் ஒன்று) பாகங்கள் பதிலீடு செய்யப்படுகின்றனவா என்பதைக் கருத்தில் கொள்ளாது கோளாறுகளுக்காக கால ஒழுங்கு முறைப்படியான பிரதான பரிசோதனைகளுக்கு உட்படலாம். ஒவ்வொரு பிரதான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும் போது, ஏற்பிசைவுக்கான நிபந்தனைகள் திருப்தி செய்யப்படின், அதன் கிரயமானது ஆதனம் பொறி உபகரணங்களின் முன்கொனரற் செல்லல் பெறுமதியில் பதிலீடு எனக் கொள்ளப்பட்டு ஏற்பிசைவு செய்யப்படும். முன்னைய பரிசோதனையின் கிரயங்களின் முன்கொனரற் பெறுமதி ஏதேனும் மீதம் இருப்பின் (பௌதீக பகுதிகளில் இருந்து தனியாக), அது ஏற்பிசைவு நீக்கப்படும். இது முன்னைய பரிசோதனையின் கிரயம் உருப்படி கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஊடுசெயல்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளாது இடம்பெறும். அவசியம் ஏற்படின், உருப்படி கொள்வனவு செய்யப்பட்ட போது அல்லது உருவாக்கப்பட்ட போதான கிரயத்தை மதிப்பிடுவதில் எதிர்கால ஒத்த தன்மையான பரிசோதனைகளின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஒரு குறிகாட்டியாகக் கொள்ளப்படலாம்.

ஏற்பிசைவு நீக்கல் (LKAS 16 இன் பந்தி 70)

ஏற்பிசைவுக் கோட்பாட்டின் கீழ் (LKAS 16 இன் பந்தி 70) உரிமம் ஒன்று ஆதனம் பொறி உபகரண உருப்படி ஒன்றின் பாகம் ஒன்றைப் பதிலீடு செய்வதற்கான கிரயத்தை அதன் முன்கொனரற் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யின், அது பதிலீடு செய்யப்பட்ட பாகம் தனியாக தேய்மானம் இடப்பட்டதா என்பதைக் கருத்தில் கொள்ளாது அதன் முன்கொனரற் பெறுமதியை ஏற்பிசைவு நீக்கம் செய்கிறது. உரிமத்துக்கு பதிலீடு செய்யப்பட்ட பாகத்தின் கொண்டுசெல்லல் பெறுமதியை மதிப்பிடுவது நடைமுறையில் சாத்தியமற்றது எனில், அது பதிலிடல் கிரயத்தை பதிலீடு செய்யப்பட்ட பாகத்தின் கொள்வனவு அல்லது உருவாக்கத் திகதியிலான கிரயத்தை குறிகாட்டியாகப் பயன்படுத்த முடியும்.

**சொத்துக்களின் பரிமாற்றம்**

ஊடுசெயல்கள் வர்த்தகக் கருத்தினைக் கொண்டிராத சந்தர்ப்பங்கள் (உ-ம்: உரிமத்தின் பொருளாதாரத்தின் மீது வெளிப்படையான தாக்கத்தைக் கொண்டிராத ஊடுசெயல்கள்) மற்றும் அல்லது பரிமாற்றப்படும் இரு சொத்துக்களதும் நியாயமான பெறுமதிகள் நம்பகமான முறையில் தீர்மானிக்கப்பட முடியாத போது தவிர, பணமல்லா சொத்துக்களின் பரிமாற்றம் அல்லது பணம்சார் மற்றும் பணமல்லா சொத்துக்களின் தொகுதிகளின் பரிமாற்றங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து ஆதனம் பொறி உபகரண உருப்படிகளும் நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட, பரிமாற்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்தின் கிரயமானது அதற்காக இழக்கப்பட்ட சொத்தின் முன்கொனரற் பெறுமதியில் மதிப்பிடப்படல் வேண்டும்.

கொடுக்கல்வாங்களானது வர்த்தக கருத்தினைக் கொண்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதில் உரிமம் குறித்த ஊடுசெயலினால் தாக்கமடையும் தொழிற்பாடுகளின் பகுதிகளில் இருந்து நியாயமாக பெறக் கூடியதாக எதிர்பார்க்கும் வரிக்குப் பின்னரான காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியினைக் கணிப்பிடல் வேண்டும். கழிவு வீதமானது சந்தை பங்குபற்றுனர் மேற்கொள்ளக் கூடிய வீதமாக அன்றி, உரிமத்தின் பணத்துக்காக காலப் பெறுமதி தொடர்பான தற்போதைய மதிப்பீடு மற்றும் குறித்த தொழிற்பாடு சார்ந்த இடர் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

**நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்களை மதிப்பிடுவதில் மதிப்பீட்டு நிபுணர்களுடன் வேலை செய்தல்**

IFRS (இலங்கைக் கண்ணோட்டத்தில் SLFRS) இன் கீழ் சீர்மதிப்பு என்பது சர்வதேச மதிப்பீட்டு நியமங்களில் வரையறுக்கப்பட்ட கலந்துரையாடப்பட்ட சீர்மதிப்பு எண்ணக்கருவில் இருந்து வேறுபட்டதாகும். ஆகவே சர்வதேச மதிப்பீட்டு நியமங்களின் கீழான சந்தைப் பெறுமதியானது கணக்கீட்டு அலகுக்கான தூண்டுதல் முதலான சில விசேட தன்மையான அனுமானங்கள் நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் சீர்மதிப்புடன் மிகவும் ஒத்த தன்மையானதாகும். சர்வதேச மதிப்பீட்டு நியமமானது ஒருங்கிணைந்த பெறுமதி முதலான கணக்கீட்டு காரணிகளைக் கருத்தில் கொள்ளும் நிலைமைகளின் போது நியாயமாக காணப்படக் கூடிய தொகை என சீர்பெறுமதியை வரைவிலக்கணம் செய்கின்றது. பதங்களிடையே வேறுபாடுகள் காணப்படினும், SLFRS 13 இல் காணப்படும் பல்வேறு விதமான நுட்பங்கள் மற்றும் எண்ணக்கருக்கள் போலவே (உயர்வான மற்றும் சிறப்பான பாவனை எண்ணக்கரு முதலானவை) சந்தைப் பங்குபற்றுனரது நோக்கினைப் பிரயோகித்தலானது தொழில்சார் மதிப்பீட்டாளர்களுக்கு பரிச்சயமான ஒன்றாகும்.

**நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்கான மதிப்பீட்டாளர்களது வேலையினைப் பயன்படுத்துவதற்கான கணக்காய்வாளர்களுக்கான வழிகாட்டல்கள்**

உரிமம் ஒன்றின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதில் இலங்கைக் கணக்காய்வு நியமங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும். அவ்வாறான நியமங்களின் இயல்பானது அவற்றின் பிரயோகத்தில் கணக்காய்வாளர் தொழில்சார் தீர்மானத்தினைப் பின்பற்றுதலை தேவைப்படுத்திகின்றது.

சீர்மதிப்பு அளவீடானது மதிப்பீட்டுடன் தொடர்புபடுவதுடன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய தொகைகளை அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவம் மதிப்பீட்டு நிபுணர் ஒருவரை ஈடுபடுத்துவதற்கான தேவைப்பாட்டினை ஏற்படுத்தக்கூடும். கணக்காய்வாளர் முகாமையினால் நியமிக்கப்பட்ட நிபுணரது அல்லது கணக்காய்வாளரே நியமித்த நிபுணரது அல்லது இருவரதும் வேலைகளைப் பயன்படுத்தத் தீர்மானிக்கக் கூடும். இலங்கைக் கணக்காய்வு நியமம் 540- சீர்மதிப்புக் கணக்கீடு மற்றும் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் முதலான கணக்கீட்டு மதிப்பீடுகளின் கணக்காய்வு செய்தல் நியமமானது அவ்வாறு மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொகைகள் நியாயமானவையாகவும் போதுமானவையாகவும் உள்ளனவா என்பதற்கான போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என வழிகாட்டுகிறது.

இலங்கைக் கணக்காய்வு நியமம் 500- *கணக்காய்வு சான்றுகள்* இன் பந்தி 9 கணக்காய்வு சான்றாகப் பயன்படுத்துவதற்கான தகவலானது முகாமையின் நிபுணரது வேலைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு இருப்பின், கணக்காய்வாளர் அவசியமான அளவில் முகாமை நிபுணரது வேலைகளின் முக்கியத்துவம் தொடர்பாக தமது தேவைகளுக்காக பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்:

அ) நிபுணரது தகைமை, இயலுமைகள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றை மதிப்பிடல் வேண்டும்.

ஆ) அந்த நிபுணரது வேலை தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்,

இ) பொருத்தமான உறுதிப் படுத்தலுக்கான முகாமையின் நிபுணரது வேலைகளை பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாட்டுத் தன்மையினை மதிப்பீடு செய்தல்.

குறிப்பிட்ட இலங்கைக் கணக்காய்வு நியமத்தின் பந்தி 34 முதல் 48 வரையான பகுதிகளில் பிரயோகத்துக்கான வழிகாட்டலானது குறிப்பிடப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் கணக்காய்வாளரது நிபுணர் ஒருவரது வேலைகளை பயன்படுத்த விரும்பும் போது அவரது பொறுப்புக்கள் இலங்கைக் கணக்காய்வு நியமம் 620 *கணக்காய்வாளரது நிபுணர் ஒருவரது வேலைகளை பயன்படுத்துதல்* இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நியமத்தின் பந்தி 9க்கு அமைவாக கணக்காய்வாளர் தமது நிபுணர் கணக்காய்வாளரது நோக்கத்துக்கு அமைவான தகைமை, இயலுமைகள் மற்றும் தற்சார்பற்ற நிலை ஆகியவற்றைக் கொண்டுள்ளாரா என்பதை மதிப்பிடுதல் வேண்டும். மேலும், அந்த நிபுணரது வேலைகளின் தன்மை, பரப்பெல்லை மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றை தீர்மானிக்கும் நோக்கில், கணக்காய்வாளரது நோக்கத்துக்கான அடிப்படையில் நிபுணரது வேலையின் போதுமான தன்மையினை மதிப்பீடு செய்து, நிபுணரது நிபுணத்துவப் பகுதி தொடர்பான போதிய புரிந்துணர்வினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் (பந்தி 10). மேலும், பின்வரும் விடயங்கள் அந்த நிபுணருடன் இணங்கிக் கொள்ளப்பட வேண்டும் என பந்தி 11 வேண்டி நிற்கின்றது:

(a) நிபுணரது இயல்பு, பரப்பெல்லை மற்றும் நோக்கங்கள்

(b) கணக்காய்வாளர் மற்றும் நிபுணர் ஆகியோரது வகிபாகன்கள் மற்றும் உரிய பொறுப்புக்கள்

(c) நிபுணரால் வழங்கப்பட வேண்டிய அறிக்கையின் வடிவம் உள்ளடங்கலாக கணக்காய்வாளர் மற்றும் நிபுணர் ஆகியோரிடையே இடம்பெறக்கூடிய தொடர்பாடல்களின் தன்மை, காலஎல்லை மற்றும் பரப்பெல்லை.

(d) கணக்காய்வாளரது நிபுணர் இரகசியத்தன்மை தொடர்பான விடயங்களை அவதானிக்க வேண்டிய தேவைப்பாடு

சீர்மதிப்பு மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஆகியன இலங்கை நிதி அறிக்கையில் நியமங்களுக்கு இணக்கமான விதத்தில் அமைந்துள்ளனவா என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்கக்கூடிய வகையில் கணக்காய்வாளர் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## இணைப்பு 1 – அறிக்கை உள்ளடக்கங்கள்

மதிப்பீட்டினை சரியான வகையில் புரிந்து கொள்வதற்கு அவசியமான தகவல்களைத் தொடர்பாடல் செய்யும் நோக்கத்துக்காக, நிதி அறிக்கையிடல் தேவைகளுக்காகத் தயாரிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கையில் பின்வரும் தகவல்களை உள்ளடக்குமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

(a) மதிப்பீட்டாளரின் அடையாளப்படுத்தல் மற்றும் தராதரம்
(b) சேவை பெறுநர் மற்றும் வேறு உத்தேச பயனாளர்களை இனங்காணல்
(c) மதிப்பீட்டின் நோக்கம்
(d) மதிப்பீடு செய்யப்படும் சொத்தின் இனங்காணல்
(e) மதிப்பீட்டின் அடிப்படை
(f) மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்படும் உயர்வான மற்றும் சிறப்பான பாவனை
(g) புலனாய்வின் விஸ்தீரணம்
(h) சொத்து மற்றும் தாக்கம் செலுத்தக் கூடிய தடங்கல்கள் தொடர்புபட்ட குறைபாடுகள் மற்றும் மதிப்பீட்டின் தாக்கம்
(i) தங்கியிருக்கப்படும் தகவலின் தன்மை மற்றும் மூலம்
(j) எடுகோள்கள் மற்றும் விசேட அனுமானங்கள்
(k) மதிப்பீடு இந்த வழிகாட்டல்களுடன் இணங்கிக் காணப்படுகிறது என்னும் உறுதிப்பாடு
(l) மதிப்பிடல் அணுகுமுறை மற்றும் காரணப்படுத்தல்
(m) மதிப்பீட்டின் தொகை அல்லது மதிப்புக்களின் வீச்சு
(n) மதிப்பீட்டு அறிக்கையின் திகதி மற்றும் மதிப்பீட்டின் செல்லுபடித் திகதி

### இணைப்பு 2- SLFRS 13 இனால் வேண்டப்படும் சீர்மதிப்பு வெளிப்படுத்தல்கள்

| உசாத்துணை | வெளிப்படுத்தல்கள் | ஆம்/இல்லை/தொ.அ |
|---|---|---|
| SLFRS13 பந்தி 91 | 1. உரிமம் அதன் நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துனர் கீழ்வரும் இரண்டினையும் மதிப்பிட உதவும் தகவல்களை வெளிக்காட்டும்:<br>(அ) ஆரம்ப ஏற்பிசையின் பின்னர் நிதிநிலைக் கூற்றில் மீளநிகழும் அல்லது மீளநிகழாத அடிப்படையில் சீர்மதிப்பில் அளவிடப்படும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கு, அந்த அளவீடுகளை விருத்தி செய்தலில் உபயோகித்த மதிப்பீட்டு நுட்பங்களும் உள்ளீடுகளும்.<br>(ஆ) கணிசமான அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை (மட்டம் 3) உபயோகித்து மீளநிகழும் சீர்மதிப்பு அறவீடுகளுக்கு, காலத்திற்கான இலாப, நட்டம் அல்லது பிற முற்றடக்க வருமானத்தில் அளவீடுகளில் தாக்கம். | |

| | | |
|---|---|---|
| SLFRS13 பந்தி 92 (a)-(d) | பந்தி 91 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு, உரிமம் கீழ்வரும் சகலவற்றினையும் கவனத்திற் கொள்ளும்:<br>(அ) வெளிக்காட்டற் தேவைப்பாடுகளை திருப்தி செய்வதற்கு அவசியமான விபரங்களின் மட்டம்;<br>(ஆ) ஒவ்வொரு வேறுபட்ட தேவைப்பாடுகள் மீதும் வைக்கவேண்டிய முக்கியத்துவ அளவு;<br>(இ) மேற்கொள்ள வேண்டிய சேர்க்கை மற்றும் பகுப்புகளின் அளவு;<br>(ஈ) வெளிக்காட்டப்பட்ட கணியரீதியான தகவல்களை மதிப்பாய்வு செய்வதற்கு நிதிக்கூற்றுக்களை உபயோகிப்போருக்கு மேலதிக தகவல்கள் தேவையா என்பதுபற்றி. | |
| | **2.** இந்த SLFRS மற்றும் ஏனைய SLFRS களுக்கு அமைய வழங்கப்பட்ட வெளிக்காட்டில்கள் SLFRS 13 பந்தி 91 இன் குறிக்கோள்களை அடைவதற்கு போதுமானதாக இல்லாவிடில் அந்த நோக்கங்கள் அடைவதற்கு அவசியமான மேலதிக தகவல்களை வழங்குதல | |
| SLFRS13 பந்தி 93 (a)-(i) | 3. SLFRS 13 நியமத்தின் பந்தி 91 இன் நோக்கங்களை அடைவதற்கு, உரிமமொன்று ஆரம்ப ஏற்பிசைவுக்குப் பின்னர் சீர்மதிப்பில் அளவிடப்படும் (இந்த SLFRS இன் நோக்கெல்லைக்கு உட்பட்ட சீர்மதிப்பு அடிப்படையில் அமைந்த அளவீடுகள் உள்ளடங்கலாக) சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் ஒவ்வொரு வகுப்பிற்கும் (சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் பொருத்தமான வகுப்புக்களை தீர்மானிப்பது பற்றிய தகவல்களுக்கு பந்தி 94 இனை பார்க்கவும்) குறைந்த பட்சமாக கீழ்வரும் தகவல்களை நிதிநிலைக்கூற்றில் வெளிக் காட்டும்:<br>(அ) மீளநிகழும் மற்றும் மீளநிகழாத சீர்மதிப்பு அளவீடுகளுக்கு அறிக்கையிடற் கால இறுதியில் சீர்மதிப்பு அளவீடும், மீளநிகழா சீர்மதிப்பு அளவீடுகளுக்கு அந்த அளவீட்டுக்கான காரணங்களும்.<br>(ஆ) மீளநிகழும் மற்றும் மீளநிகழாத சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில், சீர்மதிப்பு அளவீடுகள் முழுவதும் வகைப்படுத்தப்படும் சீர்மதிப்பு படியமைப்பு மட்டம் (மட்டம் 1, 2 அல்லது 3).<br>(இ) அறிக்கையிடற்கால முடிவில் வைத்திருக்கப்படும், மீளநிகழும் அடிப்படையில் சீர்மதிப்பில் அளவிடும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை பொறுத்தமட்டில், சீர்மதிப்பு படியமைப்பில் மட்டம் 1, மட்டம் 2 க்கு இடையில் மாற்றம் ஏதும் நிகழ்ந்திருப்பின் அந்தத் தொகைகள், அந்த மாற்றங்களுக்கான காரணங்கள் மற்றும் மட்டங்களுக்கிடையில் மாற்றம் எப்போது நிகழ்ந்திருக்குமென தீர்மானிப்பதற்கான உரிமத்தின் கொள்கை. ஒவ்வொரு மட்டத்திலும் உள்நோக்கிய மாற்றங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் வெளிநோக்கிய மாற்றங்களிலிருந்து வேறாக வெளிக்காட்டி ஆராயப்படும்.<br>(ஈ) சீர்மதிப்புப் படியமைப்பின் மட்டம் 2 மற்றும் மட்டம் 3 களுள் வகைப்படுத்திய மீளநிகழும் மற்றும் மீளநிகழாத சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில், மதிப்பீட்டு நுட்பம் பற்றிய விபரமும் சீர்மதிப்பு அளவீட்டில் உபயோகித்த உள்ளீடுகளும். | |

மதிப்பீட்டு நுட்பத்தில் மாற்றம் ஏற்படுத்தியிருப்பின் (உதா: சந்தை அணுகுமுறையிலிருந்து வருமான அணுகுமுறைக்கு மாற்றுதல் அல்லது மேலதிக மதிப்பீட்டு நுட்பத்தின் உபயோகம்), உரிமம் அந்த மாற்றத்தினையும் அதற்கான காரணத்தினையும் வெளிக்காட்டும். சீர்மதிப்புப் படியமைப்பின் மட்டம் 3 இல் வகைப்படுத்தப்பட்ட சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில், அந்த சீர்மதிப்பு அளவீட்டில் உபயோகித்த கணிசமான அவதானிக்கமுடியாத உள்ளீடுகள் பற்றிய கணியரீதித் தகவல்களை உரிமம் வழங்கும். சீர்மதிப்பினை அளவிடும்போது உரிமத்தினால் கணியரீதியிலான அவதானிக்க முடியாத உள்ளீடுகள் விருத்தி செய்யப்படாத இடத்து (உதா: உரிமம் முன்னைய ஊடுசெயல்களிலிருந்து அல்லது மூன்றாம் தரப்பினர் விலையிடற் தகவல்களிலிருந்து விலைகளை செம்மையாக்கம் செய்யாது உபயோகிக்கும்போது), உரிமம் இந்த வெளிக்காட்டற் தேவைப்பாடுகளுடன் ஒத்திசையும் வகையில் கணியரீதியான தகவல்களை தயாரித்தல் தேவைப் படாது. எனினும், இந்த வெளிக்காட்டல்களை வழங்கும்போது, சீர்மதிப்பு அளவீட்டுக்கு கணிசமானதும், உரிமத்திற்கு நியாயபூர்வமாக கிடைக்கப் பெறுவதுமான கணியரீதியிலான அவதானிக்கமுடியாத உள்ளீடுகளை உரிமம் தவிர்க்க முடியாது.

(உ) சீர்மதிப்புப் படியமைப்பில் மட்டம் 3 இல் வகைப்படுத்தப்பட்ட மீளநிகழும் சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில், காலத்தின்போது கீழ்வருவன தொடர்பான மாற்றங்களை வேறாகக் காட்டும், ஆரம்ப மீதியிலிருந்து இறுதி மீதிக்கான கணக்கிணக்கம்:

(i) காலத்தின்போது இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மொத்த நயம் அல்லது இழப்புகளும் இலாப, நட்டத்தில் அவை ஏற்பிசைவு செய்யப்பட்ட வரிசை உருப்படிகளும்.

(ii) காலத்தின்போது பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட மொத்த நயம் அல்லது இழப்புகளும் பிற முற்றடக்க வருமானத்தில் அவை ஏற்பிசைவு செய்யப்பட்ட வரிசை உருப்படிகளும்.

(iii) கொள்வனவுகள், விற்பனைகள், வழங்கல்கள் மற்றும் தீர்ப்பனவுகள் (ஒவ்வொரு மாற்றங்களின் வகைகளும் வேறாக வெளிக்காட்டும் வகையில்).

(iv) சீர்மதிப்புப் படியமைப்பின் மட்டம் 3 இனுள் அல்லது அதிலிருந்து மாற்றல்கள் எதுவும் இருப்பின், அந்த தொகைகள், அந்த மாற்றல்களுக்கான காரணங்கள் மற்றும் மட்டங்களுக்கிடையில் மாற்றல் எப்போது நிகழ்ந்ததாக கொள்ளப்படும் என்பதனை தீர்மானிப்பதற்கு உரிமத்தின் கொள்கை (பந்தி 95 இனை பார்க்கவும்). மட்டம் 3 க்கு உள்ளான மாற்றல்கள் மட்டம் 3 இலிருந்து வெளியேயான மாற்றங்களிலிருந்து வேறாக வெளிக்காட்டப்பட்டு விபரிக்கப்படும்.

(ஊ) சீர்மதிப்புப் படியமைப்பின் மட்டம் 3 இனுள் வகைப்படுத்தப்பட்ட மீளநிகழும் சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில், அறிக்கையிடற்கால இறுதியில் கொண்டுள்ள

அந்த சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுடன் தொடர்புபட்ட தேறாத நயங்கள் அல்லது இழப்புக்களில் மாற்றத்தின் காரணமாக அமைந்து இலாப, நட்டத்தில் உள்ளடக்கப்பட்ட, e (i) இலுள்ள காலத்தின் மொத்த நயங்கள் அல்லது இழப்புக்களின் தொகையும், அந்த தேறாத நயங்கள் அல்லது இழப்புக்கள் இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட வரிசை உருப்படியும் (உருப்படிகளும்).

(எ) சீர்மதிப்புப் படியமைப்பின் மட்டம் 3 இனுள் வகைப்படுத்தப்பட்ட மீளநிகழும் மற்றும் மீளநிகழாத சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில், உரிமத்தால் உபயோகிக்கப்பட்ட மதிப்பீட்டுச் செயன்முறை பற்றிய விபரம் வருமான அணுமுறை பிரயேகிக்கப்படும் பச்சத்தில் இணக்கம் மேற்கொள்ளப்படும் தடவைகள் மற்றும் முறைகள், விலையிடல் மாதிரிகளின் பிற்சோதனை மற்றும் ஏனைய சோதனைகளின் விடுமுரைகல் [IFRS 13 IE65 (B)];

(ஏ) சீர்மதிப்புப் படியமைப்பின் மட்டம் 3 இனுள் வகைப்படுத்தப்பட்ட மீளநிகழும் சீர்மதிப்பு அளவீடுகளைப் பொறுத்தமட்டில்,

(i) அத்தகைய சகல அளவீடுகளுக்கும், அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளின் வேறு தொகைக்கு மாற்றம் கணிசமான அளவு அதிகமான அல்லது குறைந்த சீர்மதிப்பு அளவீட்டை விளைவிப்பின், அந்த உள்ளீடுகளில் மாற்றங்களுக்கு சீர்மதிப்பு அளவீட்டின் உணர் திறன் பற்றிய சுருக்கமான விபரம். அந்த உள்ளீடுகளுக்கும் சீர்மதிப்பு அளவீட்டில் உபயோகிக்கப்பட்ட ஏனைய அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளுக்கும் இடையில் இடைத்தொடர்பு காணப்படின், உரிமம் அந்த இடைத்தொடர்பு பற்றிய விபரத்தினையும், சீர்மதிப்பு அளவீட்டில் அவை எவ்வாறு அவதானிக்க முடியாத உள்ளீடுகளில் மாற்றங்களின் விளைவை உயர்த்தும் அல்லது தாழ்த்தும் என்பது பற்றிய விபரத்தினையும் வழங்கும். அந்த வெளிக்காட்டற் தேவைப்பாடுகளுடன் ஒத்திசையும்பொருட்டு, அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளின் மாற்றங்களுக்கு உணர்திறனின் சுருக்கமான விபரம் குறைந்தபட்சம், (d) உடன் ஒத்திசையும் போது வெளிக்காட்டப்படும் அவதானிக்கமுடியாத உள்ளீடுகளை உள்ளடக்கும்.

(ii) நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப்பரிப்புக்களைப் பொறுத்தமட்டில், நியாபூர்வமான சாத்தியமான மாற்று எடுகோள்களை பிரதிபலிக்கும் வகையில் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகள் ஒன்றினையோ அல்லது அதிகமானவற்றினையோ மாற்றுதல் சீர்மதிப்பினை கணிசமான அளவில் மாற்றுமேயாகில், உரிமம் அந்த உண்மை மற்றும் அந்த மாற்றங்களின் தாக்கம் ஆகியவற்றை வெளிக்காட்டும். உரிமம் நியாயபூர்வமான சாத்தியமான மாற்று எடுகோள்களை பிரதிபலிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தின் தாக்கம் எவ்வாறு கணிக்கப்பட்டது என்பதனையும் வெளிக்காட்டும். இந்த தேவைகளுக்காக, கணிசத்தன்மையானது இலாபம் அல்லது நட்டம் மற்றும் மொத்தச் சொத்துக்கள் அல்லது

| | | |
|---|---|---|
| | மொத்தப் பரிப்புக்கள் தொடர்பாக அல்லது சீர்மதிப்பில் மாற்றங்கள் பிற முற்றடக்க வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்போது மொத்த உரிமையாண்மை தொடர்பாக தீர்மானிக்கப்படும்.<br><br>(ஐ) மீளநிகழும் மற்றும் மீளநிகழாத சீர்மதிப்பு அளவீடுகளை பொறுத்தமட்டில், நிதிசாராத சொத்தொன்றின் உயர்ந்ததும் சிறந்ததுமான உபயோகம் அதன் நடப்பு உபயோகத்திலிருந்து வேறுபடின், அதுபற்றியும் அந்த நிதிசாராத சொத்து ஏன் உயர்ந்ததும் சிறந்ததுமான உபயோகத்திலிருந்து வேறுபட்ட வழியில் உபயோகிக்கப்படுகின்றது என்பது பற்றியும் வெளிக்காட்டும். | |
| SLFRS13 பந்தி 94 (a)-(b) | 4. உரிமமொன்று சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் பொருத்தமான வகுப்புக்களை கீழ் வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கும்:<br>(அ) சொத்து அல்லது பரிப்பின் தன்மை, குணவியல்பு மற்றும் இடர்;<br>(ஆ) சீர்மதிப்பு அளவீடு வகைப்படுத்தப்பட்ட சீர்மதிப்பு படியமைப்பு மட்டம்.<br><br>• சீர்மதிப்பு படியமைப்பின் மட்டம் 3 இல் வகைப்படுத்தும் சீர்மதிப்பு அளவீடுகளுக்கு தேவைப்படும் வகுப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்கான காரணம், அந்த அளவீடுகள் உயர்ந்த மட்ட நிச்சயமற்ற தன்மையையும் மாறுபடற் தகவினையும் கொண்டிருப்பதனாலாகும்.<br>• சீர்மதிப்பு அளவீடு பற்றிய வெளிக்காட்டல்கள் வழங்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் பரிப்புகளின் பொருத்தமான வகுப்பினை தீர்மானித்தல் சுயதீர்ப்பினை தேவைப்படுத்தும். சொத்துக்கள் மற்றும் பரிப்புகளின் வகுப்பொன்று அனேகமாக நிதிநிலைக்கூற்றில் முன்னிலைப்படுத்தப்படும் வரிசை உருப்படிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிக பகுப்பாக்கத்தினை தேவைப்படுத்தும்.<br>• எனினும், நிதிநிலைக்கூற்றில் முன்னிலைப்படுத்தும் வரிசை உருப்படிகளின் கணக்கிணக்கத்தை அனுமதிக்கும் வகையில் போதுமான தகவல்களை உரிமம் வழங்கும். சொத்து அல்லது பரிப்பின் வகுப்பினை வேறொரு SLFRS நிர்ணயிக்குமேயாகில், அந்த வகுப்பு இந்தப் பந்தியின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் பட்சத்தில், இந்த SLFRS 13 இல் தேவைப்படுத்தப்பட்ட வெளிக்காட்டல்களை வழங்குவதற்கு உரிமம் அந்த வகுப்பினை உபயோகிக்கலாம். | |
| SLFRS13 பந்தி 95 (a)-(c) | 5. SLFRS 13 இன் பந்தி 93(c) மற்றும் (e) (iv) ஆகியவற்றிற்கு அமைவாக சீர்மதிப்பு படியமைப்பு மட்டங்களுக்கு இடையில் மாற்றல்கள் எப்போது நிகழ்ந்தது எனக் கொள்ளப்படுவதனை தீர்மானிப்பதற்கான அதன் கொள்கைகளை உரிமம் வெளிக்காட்டுவதுடன் அதனை கொள்கை மாறாத அடிப்படையில் தொடர்ந்து கடைப்பிடிக்கும். மாற்றல்களை ஏற்பிசைவுசெய்யும் காலம்பற்றிய கொள்கை மட்டங்களுக்கு உள்நோக்கிய மற்றும் மட்டங்களில் இருந்து வெளியேற்றும் மாற்றல்களுக்கு ஒன்றாகவே இருக்கும். மாற்றங்களின் காலத்தினை தீர்மானிப்பதற்கான கொள்கைகளுக்கான உதாரணங்கள் கீழ்வருவனவற்றினை உள்ளடக்கும்: | |

| | | |
|---|---|---|
| | (அ) மாற்றத்தினை விளைவித்த புறநிலைகளின் நிகழ்வு அல்லது மாற்றம் ஏற்பட்ட திகதி.<br>(ஆ) அறிக்கையிடற் காலத்தின் ஆரம்பம்.<br>(இ) அறிக்கையிடற் கால முடிவு. | |
| SLFRS13 பந்தி 96 | 6. உரிமம் SLFRS 13 இன் பந்தி 48 இலுள்ள விதிவிலக்கினை உபயோகிப்பதற்கான கணக்கியற் கொள்கை தீர்மானத்தினை எடுக்குமேயாகில், அந்த உண்மையினை அது வெளிக்காட்டும். | |
| SLFRS13 பந்தி 97 | 7. நிதிநிலைக்கூற்றில் சீர்மதிப்பில் அளவிடாத ஆனால் சீர்மதிப்பு வெளிக்காட்டப்பட்ட சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் ஒவ்வொரு வகுப்பிற்கும் SLFRS 13 இன் 93(b), (d) மற்றும் (i) ஆகிய பந்திகளில் தேவைப்படுத்தப்பட்ட தகவல்கனை உரிமம் வெளிக்காட்டும். எனினும் SLFRS 13 இன், பந்தி 93(d) இல் தேவைப்படுத்தியவாறு சீர்மதிப்பு படியமைப்பின் மட்டம் 3 இல் வகைப்படுத்தப்பட்ட சீர்மதிப்பு அளவீடுகளில் உபயோகிக்கப்பட்ட கணிசமானதும் அவதானிக்க முடியாததுமான உள்ளீடுகள் பற்றி கணியரீதியான வெளிக்காட்டல்களை உரிமம் வழங்க வேண்டியதில்லை. அத்தகைய சொத்துக்கள் மற்றும் பரிப்புகளை பொறுத்தமட்டில், இந்த SLFRS இனால் தேவைப்படுத்தப்பட்ட வெளிக்காட்டல்களை உரிமம் வெளிக்காட்ட வேண்டியதில்லை. | |
| SLFRS13 பந்தி 99 | 8. வேறு வடிவமைப்பு மிகவும் பொருத்தமானதாக இருந்தாலன்றி உரிமம் இந்த SLFRS இனால் தேவைப்படுத்தப்பட்ட கணியரீதியான வெளிக்காட்டல்களை அட்டவணை வடிவில் முன்னிலைப்படுத்தும். | |

**குறிப்பு :**

நிதிக்கூற்றுக்கள் பயனாளர்களுக்குத் தேவைப்படக்கூடிய மேலதிக தகவல்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்காணப்படும் அட்டவணையின் இடது பகுதியில் முதலாவது நிரலில் காட்டப்பட்டுள்ள குறிப்புக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 13 - SLFRS 13 இன் பந்திகளைக் குறிக்கின்றன. உதாரணமாக SLFRS13 பந்தி 40 என்பது SLFRS 13 இன் 40 வது பந்தியைக் குறிக்கும்.

தயாரிப்பாளர்கள் ஒவ்வொரு வெளிப்படுத்தல் உருப்படிகளுக்கும் பொருத்தமான வகையில் ஒன்றில் ஆம், இல்லை அல்லது தொடர்பற்றது (Yes 'Y', No 'N' or Not Applied 'N/A') எனக் குறிப்பிட ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**இணைப்பு 3- பிரத்தியேகமான உருப்படிகளில் SLFRS 13 இன் நடைமுறைப் பிரயோகம்**

| | ஆ.பொ.உ (PPE) | முதலீட்டு ஆதனம் | உயிரியல் சொத்துக்கள் |
|---|---|---|---|
| பிரயோகத் தன்மை | ஆதனம் பொறி உபகரண உருப்படிகள் பிற்காலங்களில் மீள்மதிப்பீட்டு முறையாய் பயன்படுத்தி மதிப்பிடப்படும். | நியாயமான பெறுமதி முறை அல்லது கிரய முறை ஆகியவற்றில் எதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது என்பதை கருத்தில் கொள்வதில்லை. சீர்மதிப்பிட்கான வெளிப்படுத்தல் அவசியம் ஆகையால்) | ஆரம்ப மதிப்பீட்டுப் புள்ளி முதல் விற்பனைக்கான கிரயங்கள் நீக்கப்பட்ட சீர்மதிப்பு மதிப்பீடு செய்யப்படும். |
| கணக்கு வைக்கும் அலகு | பொதுவாக, தனியாக அடையாளம் காணக்கூடிய மற்றும் தனிப்பட்ட விதமாக பொருண்மைத்தன்மை வாய்ந்த உருப்படிகள் ஒரு கணக்கிட்டு அலகைக் கொண்டிருக்கும். சொத்துக்களின் தொகுதி ஒன்றுக்கு முழுமையான அடிப்படையில் மாத்திரம் சந்தை காணப்படு மாயின் (உ-ம்: காணி மற்றும் கட்டடங்கள்), அவை இரண்டுமே இரு வேறுபட்ட கணக்கீடு அலகுகளாக இருப்பினும், சொத்துத் தொகுதியின் நியாமனான பெறுமதி மொத்த அடிப்படையில் மதிப்பிடப்பட்டு மதிப்பீடு தனிப்பட்ட உருப்படிகளை ஒதுக்கீடு செய்யப்படும். | உ-ம்: கணக்கீட்டு அலகானது நிலம், கட்டடம், கட்டடத்தின் ஒரு பகுதி அல்லது இரண்டையும் உள்ளடக்கி இருப்பதுடன் தளபாடங்கள் பொருத்தப்பட்ட அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருப்பின், தொடர்புபட்ட நகர்த்தக்கூடிய தளபாடங்கள் உள்ளடங்கலாக | தனியான சொத்தாகவோ அல்லது சொத்துத் தொகுதியாகவோ காணப்படலாம்.<br>உ-ம்: காட்டிலுள்ள மரங்கள்<br><br>LKAS 41 ஆனது சொத்துக்கள் அவற்றின் முக்கிய இயல்புகளின் அடிப்படையில் குழுக்களாக்கப்படுவதை அனுமதிக்கிறது.<br>• உ-ம்: கால்நடைகள் அவற்றின் வயது அல்லது நிறையின் அடிப்படையில்<br>• பயிர்கள் தரத்தின் அடைப்படையில்<br><br>அறுவடை வரையில், உயிரியல் சொத்துக்களில் காணப்படும் எதிர்கால விவசாய உற்பத்திகள் தனியாக ஏற்பிசைவு செய்யப்படாது சீர்மதிப்பு சொத்தின் மொத்தமான அடிப்படையிலேயே மதிப்பீடு செய்யப்படும்.<br><br>இணைந்த உயிரியல் சொத்துக்கள் மற்றும் காணி மற்றும் காணி மேம்படுத்தல்களின் தொகுதிக்கு மாத்திரம் சீர்மதிப்பிட்கான சந்தை காணப்படும் போது உயிரியல் சொத்துக்களின் நியாயமான பெறுமதியை மதிப்பிடும் |

| | | | |
|---|---|---|---|
| | | | நோக்கத்திற்காக காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் சீர்மதிப்பினை சொத்துத் தொகுதியின் மதிப்பீட்டில் இருந்து கழித்தல் வேண்டும். |
| மதிப்பீட்டு அணுகுமுறைகள் மற்றும் நுட்ட ங்கள் | • வழக்கமாக சந்தை அணுகுமுறையின் ஊடாக<br>• அண்மைய காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டு இருப்பின் கிரய அணுகுமுறை<br>• விசேட தன்மை வாய்ந்த பொறிகளுக்காக கிரய அணுகுமுறை | வழக்கமாக சந்தை அணுகுமுறையின் ஊடாக (உ-ம்: அளவீடுகளின் பெருக்கமாக: சதுர அடி அல்லது மீற்றருக்கான விலை மற்றும் முதலீட்டு ஆதனத்தின் பரப்பளவு<br><br>வருமான அணுகுமுறை (உ-ம்: வருமான முறை - சொத்து அல்லது சொத்தின் பெறுமதியின் தற்போதைய அல்லது சந்தை வாடகைப் பெறுமதிகள்) மற்றும் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் நுட்பங்கள் - ஆதனத்தின் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களினை முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கும் திரும்பல் வீதத்தினால் கழிவிடல்.<br><br>மதிப்பீட்டு நுட்பங்கள் பெறுபேறுகள் அவதானிக்கக் கூடிய சந்தைத் தரவுகளை வெளிப்படுத்துதலை உறுதி செய்யும் வகையில் சீராக்கப்படல் வேண்டும்.<br><br>கிரய அணுகுமுறை- (நிர்மாணித்தலுக்கான கிரயம், நிதியிடல் கிரயம் மற்றும் ஒரு நியாயமான இலாப எல்லை) நிர்மாணிக்கப்பட்டுவரும் த்திலுள்ள முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பானது கிரய அடிப்படையைப் பயன்படுத்தி அளவிடப்படலம். | உயிருள்ள விலங்குகள் சந்தை அணுகுமுறையைப் பயன்படுத்தி. ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில் உள்ள பயிர்கள் கிரய அணுகுமுறையைப் பயன்படுத்தியும் பின்னர் வருமான முறையிலும். (மதிப்பீட்டு நுட்பம் சீராக்கப்படல் வேண்டும்) |

குறிப்பு 01

உயிரியல் சொத்து ஒன்றின் சீர்மதிப்பு சொத்தின் நடைமுறை அறுவடைப் பெறுமதியை மாத்திரமன்றி மதிப்பீட்டில் சந்தைப் பங்குபற்றுனர் ஒருவர் கருத்தில் கொள்ளக்கூடிய மேலதிக உயிரியல் நிலைமாற்றலினையும் உள்ளடக்கும். ஆகவே, சொத்துடன் இணைந்த இடர்கள் (உ-ம்: காலநிலை), மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் சொத்தினை எதிர்பாராத நிலைமைக்கு கொண்டுவருவதற்கான கிரயங்கள் முதலானவற்றையும் உள்ளடக்கும். இந்த இடர்கள் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் தொடர்பான நிச்சயமற்ற தன்மையினை எதிர்கொள்வதுடன் அவை கழிவிடல் வீதம் அல்லது எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களின் மதிப்பீடு ஆகியவற்றினால் வெளிக்காட்டப்படும்.

கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் முறையிலான மதிப்பீட்டில், சொத்தினுடைய தற்போதைய நிலைமை மற்றும் அமைவிடத்திலான நியாயமான பெறுமதியினை தீர்மானிப்பதற்காக தற்போதைய சந்தைத் தீர்மான வீதத்தில் கழிவிடப்பட்ட சொத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியானது பயன்படுத்தப்படுகிறது. மதிப்பீடானது நம்பகத் தன்மை வாய்ந்தது என்பதை உறுதி செய்வதற்காக பொருத்தமான கழிவிடல் வீதம் ஒன்றினை தீர்மானித்தல் அவசியமானதாகும்.

ஆரம்ப கிரயம் நிகரற்பட்டத்திலிருந்து இருந்து சிறிதளவான உயிரியல் நிலைமாற்றங்கள் மாத்திரமே இடம்பெற்று இருப்பின், கிரயம் சீர்மதிப்பிற்கு அண்மித்ததாகக் காணப்படும். (LKAS 24 இன் பந்தி 24). இவ்வாறான நிலைமைகளில், தெரிவு செய்யப்பட்ட கழிவிடல் வீதமானது கிரயத்துக்கு அண்மித்ததான நியாமான பெறுமதி மதிப்பீட்டை வழங்குதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதை சர்வதேச நிதி அறிக்கையிடல் வியாக்கியானக் குழு அவதானித்துள்ளது.

சொத்தின் சீர்மதிப்பு அதே சொத்தின் (மாற்றங்கள் மற்றும் பொதியிடல் இன்றி) அவதானிக்கக் கூடிய தற்போதைய சந்தை ஊடுசெயல்களுடன் ஒப்பிடப்பட்டு அல்லது அவதானிக்கப்படக் கூடிய சந்தைத் தரவுகள் உள்ளடக்கப்பட்ட மாறிகளைக் கொண்ட மதிப்பிடல் நுட்பத்தின் அடிப்படையில் சான்றுப்படுத்தப்படாதவிடத்து சொத்து ஒன்றின் ஆரம்ப மதிப்பீட்டிலான நியாயமான பெறுமதியின் மிகச் சிறந்த சான்றானது ஊடுசெயல் விலை ஆகும். இங்கு கூறப்பட்ட தேவைப்பாட்டின் பிரயோகமானது சொத்து ஒன்றின் ஆரம்ப மதிப்பீட்டில் எதுவிதமான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏற்பிசைவு செய்யப்படாதா நிலைமைக்கு வழிவகுக்கலாம். அவ்வாறான நிலைமைகளின் போது, சந்தைப் பங்குபற்றுனர்கள் விலையைத் தீர்மானிக்கும் போது கருத்தில் கொள்ளக்கூடிய காரணி (காலம் உள்ளடங்கலான) ஒன்றின் மாற்றம் காரணமாக ஏற்பாடக் கூடிய அளவிற்கு இலாபம் அல்லது நட்டங்கள் ஆரம்ப மதிப்பீட்டிற்கு பிற்பட்ட காலங்களில் ஏற்பிசைவு செய்யப்படலாம். காலரீதியான அடிப்படையில் உரிமம் மதிப்பீட்டு முறைகளை சீராக்கம் செய்வதுடன் அதே சொத்தின் அவதானிக்கக் கூடிய தற்போதைய சந்தைக்கு ஊடுசெயல்களின் விலைகளை பயன்படுத்தி அதன் செல்லுபடித் தன்மையைப் பரிசோதிக்கின்றன. சொத்து உருவாக்கப்பட்ட அதே சந்தையில் இருந்தே உரிமம் சந்தைத் தரவுகளை பெற்றுக் கொள்ளும்.

சொத்தின் தற்போதைய வடிவத்திற்கு செயற்திறனான சந்தை ஒன்று காணப்படாத போது அவற்றின் சீர்மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக அவதானிக்கக் கூடிய சந்தை விலைகள் கிடைக்க கூடியதாகவுள்ள ஒத்த சொத்துக்களின் விலைகளை உள்ளீடாகப் பயன்படுத்த முடியும். பின்னர், அவதானிக்கக் கூடிய சந்தை விலைகள் கிடைக்கக் கூடியதாக உள்ள ஒத்த சொத்துக்கள் மற்றும் சீர்மதிப்பு மதிப்பீடு செய்யப்படும் சொத்து ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளுக்காக பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

நடைமுறையில், காசுப் பாய்ச்சலானது தாவரத்தின் முழுமையான ஆயுட் காலத்துக்கும் தற்போதைய கிரயம் மற்றும் விலைகளில் தயாரிக்கப்படும். IFRIC இன் நிகழ்ச்சிநிரல் தீர்மானத்தின் அடிப்படையில் நிகர இற்றைய பெறுமதி பயிரிடப்படும் பொழுதிலான ஆரம்பக் கிரயங்களை அண்மிக்கக் கூடிய வகையில் கழிவிடல் வீதம் தீர்மானிக்கப்படும். இது சீராக்கலுக்கான தேவையினை திருப்தி செய்வதுடன் முதலாவது நாளின் இலாபத்தினை தவிர்க்க உதவும். பிற்காலங்களில் புதிய நடைமுறை கிரயங்கள் மற்றும் விலைகள் அடிப்படையில் மீளக்கணித்தல்கள் மேற்கொள்ளப்படும். வேறுபட்ட காலப்பகுதிகளில் கணிப்பிடப்படும் நியாயமான பெறுமதி குறித்த நேரத்திலான விலைகளை வெளிப்படுத்தும்.

## இணைப்பு 4 – வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பதங்கள்

| | |
|---|---|
| செயற்திறனான சந்தை | தொடர்ச்சியான முறையில் விலையிடல் தகவல்களை வழங்கக் கூடிய போதுமான மீள் ஒழுங்கு மற்றும் தொகையில் மீடிறன் மற்றும் தொகையில் சொத்து அல்லது பொறுப்புக்கான ஊடுசெயல்கள் இடம்பெறக்கூடிய சந்தை. |
| உயிரியல் சொத்து | *உயிரியல் சொத்து* என்பது ஒரு உயிர்வாழும் விலங்கு அல்லது தாவரம் ஆகும். |
| விற்பனை செயிதல் கிரயம் | சொத்து ஒன்றின் முடிவு செய்தல் அல்லது பணம் உழைக்கும் அலகு ஒன்றிற்கு நேரடியாக ஒதுக்கீடு செய்யப்படக் கூடிய நிதிச்செலவுகள் மற்றும் வரிச்செலவுகள் நீங்கலான அதிகரித்த கிரயங்கள் |
| விற்பதற்கான கிரயம் | *விற்பதற்கான கிரயம்* என்பது சொத்து ஒன்றின் முடிவு செய்தல் அல்லது பணம் உழைக்கும் அலகு ஒன்றிற்கு நேரடியாக ஒதுக்கீடு செய்யப்படக் கூடிய நிதிச் செலவுகள் மற்றும் வரிச்செலவுகள் தவிர்ந்த அதிகரித்த கிரயங்கள் ஆகும். |
| உட்புகுதல் விலை | பரிமாற்று ஊடுசெயல் ஒன்றில் சொத்து ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்படும் அல்லது பொறுப்பு ஒன்றினை ஏற்றுக் கொள்வதற்காக பெறப்படும் விலை இதுவாகும். |
| வெளியேறல் விலை | பரிமாற்று ஊடுசெயல் ஒன்றில் சொத்து ஒன்றை விற்பதனால் பெற்றுக் கொள்ளப்படும் அல்லது பொறுப்பு ஒன்றினைத் தீர்ப்பதற்காக செலுத்தப்படும் விலை இதுவாகும். |
| உயர்ந்த மற்றும் சிறந்த பாவனை | சொத்து ஒன்றின் அல்லது சொத்துக்களின் தொகுதி மற்றும் சொத்துக்கள் பயன்படுத்தத்தக்க பொறுப்புக்களின் (உதாரணமாக ஒரு வணிகம்) பெறுமதியை உச்சப்படுத்தக் கூடியவாறான சந்தைப் பங்குபற்றுனர்களது நிதிசாரா சொத்து ஒன்றின் பயன்பாடு இதுவாகும். |
| மிக அனுகூலமான சந்தை | *மிக அனுகூலமான சந்தை* என்பது சொத்துக்கான ஊடுசெயல் கிரயங்கள் மற்றும் போக்குவரத்துக் கிரயங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சொத்தினை விற்பதனால் பெறப்படக்கூடிய தொகையினை உச்சப்படுத்தக்கூடிய சந்தை ஆகும். |
| அவதானிக்கக் கூடிய உள்ளீடுகள் | உண்மையான நிகழ்வுகள் மற்றும் ஊடுசெயல்கள் முதலான சந்தைத் தரவுகளை பயன்படுத்தி உருவாக்கப்படும், சொத்துக்கள் அல்லது பரிப்புக்களின் விலையிடலைத் தீர்மானிக்கும் போது சந்தைப் பங்குபற்றுனர்களால் பயன்படுத்த எதிர்பார்க்கப்படும் எடுகோள்கள் இவையாகும். |
| பிரதான சந்தை | சொத்துக்கான பிரதானமான சந்தை என்பது சொத்துக்கான கூடுதலான தொகை மற்றும் செயற்பாடுகளின் மட்டங்களைக் கொண்ட சந்தை ஆகும். |
| பொதுமக்களுக்கு வகைகூறல் | உரிமம் ஒன்று பொதுமக்களுக்கு வகைகூறல உள்ளதாக பின்வரும் சந்தர்ப்பங்களில் கருதப்படும்:<br><br>(அ) அதன் உரிமையாண்மை அல்லது கடன் பத்திரங்கள் பொதுப் பரிமாற்று ஒன்றில் (உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனை அல்லது உள்நாட்டு மற்றும் பிராந்திய சந்தைகள் உள்ளடங்கலாக மேசைப்பரப்பின் மேலான சந்தை) வியாபாரம் செய்யப்படல் அல்லது அவ்வாறான ஆவணங்கள் பொதுப் பரிமாற்றம் ஒன்றில் விற்பனை செய்யப்படுவதற்கான செயற்பாட்டில் இருத்தல், அல்லது<br><br>(ஆ) அதன் பிரதான வணிகங்களில் ஒன்றாக பெருந்தொகையான வெளிவாரித் தரப்பினரது சொத்துக்களை நம்பிக்கை அடிப்படையில் வைத்திருத்தல். இது பொதுவாக வங்கிகள், கடன் வழங்கல் அமைப்புக்கள், காப்புறுதிக் கம்பனிகள், பங்குப்பத்திர முகவர்கள் அல்லது தரகர்கள், பரஸ்பர நிதியங்கள் மற்றும் முதலீட்டு வங்கிகளை உள்ளடக்கும்.<br><br>இந்த நோக்கங்களுக்காக பொதுமக்களுக்கு வகைகூறல் கொண்ட உரிமங்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:<br><br>– 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற கம்பனிகள் |

| | |
|---|---|
| | – 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் காப்புறுதி வணிகத்தை நடாத்துவதற்காக உரிமம் பெற்ற கம்பனிகள்<br>– குத்தகை வணிகத்தில் ஈடுபடும் கம்பனிகள்<br>– காரணிப்படுத்தல் கம்பனிகள்<br>– 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்<br>– 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் அலகுப் பொறுப்பாட்சியை நடாத்துவதற்கான உரிமம் பெற்ற கம்பனிகள்<br>– நிதி முகாமைக் கம்பனிகள்<br>– 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் பங்குத்தரகர் அல்லது பங்கு முகவர் வணிகத்தை முன்னெடுப்பதற்கான உரிமம் பெற்ற கம்பனிகள்<br>– 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் பங்குப்பரிவர்த்தனை ஒன்றை நிர்வகிப்பதற்கான உரிமம் பெற்ற கம்பனிகள்<br>– 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நிரற்படுத்தப்பட்ட கம்பனிகள்<br>– பொருட்களின் விற்பனை அல்லது சேவை வழங்கலில் ஈடுபட்டுள்ள பொதுக் கூட்டுத்தாபனங்கள் |
| மீளப்பெறக் கூடிய தொகை | சொத்து அல்லது காசு உழைக்கும் அலகு ஒன்றின் *மீளப்பெறக் கூடிய தொகை* என்பது அதன் முடிவு செய்தலுக்கான கிரயங்கள் நீங்கலான நியாயமான பெறுமதி மற்றும் பாவனையில் உள்ள பெறுமதி ஆகியவற்றில் உயர்ந்தது அதுவாகும். |
| அவதானிக்க முடியாத உள்ளீடுகள் | சந்தைத் தரவுகள் கிடைக்கப்பெறாததாக உள்ள சொத்து அல்லது பரிப்பு ஒன்றின் விலையிடலின் போது சந்தைப்பங்குபற்றுனர்கள் பயன்படுத்தக் கூடிய தகவல்கள் தொடர்பான சிறந்த எடுகோள்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உள்ளீடுகள் ஆகும். |

**மூலங்கள்:**

Code of Ethics for Professional Accountants (2014)

International Valuation Standards (2011). The bound volume including the IVS Framework, the IVS General Standards, IVS Asset Standards and IVS Applications

Sri Lanka Accounting Standards (2015).The bound volume of the SLFRSs including all the revised Accounting Standards that have been adopted as per 2015 'Consolidated without early adoption version of the IFRS bound volume'

Ratnayake, A. (2010, September), Valuing biological assets. Financial Management CIMA (UK)

The KPMG International Standards Group (2014/15), Insights into IFRS

The International Financial Reporting Group of EY (2014), International GAAP 2014

12-414

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.